முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,

நாள். 20.08.2025.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,

**அசல் வழக்கு எண். 108/2023**

2025-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20ம் நாள் புதன்கிழமை உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பானுமதி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | தசரதன் | வயது | : | 62 |
| ஊர் | : | கோவிலூர் | தொழில் | : | இல்லத்தரசி |

**வா.சா. 1 : (பானுமதி) வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதன்மை விசாரணை :**

நான் இவ்வழக்கில் **வாதி ஆவேன். நான் வாதி தரப்பு முதல் சாட்சி (வா.சா.1) ஆவேன்.** எனது வாக்கு மூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனக்கு எழுத படிக்க தெரியாது. ஆனால் கையொப்பம் மட்டும் இடுவேன். இதில் உள்ள சங்கதிகள் என் வழக்கறிஞர் படித்துக் காட்டி புரிந்துகொண்டு கையொப்பம் இட்டேன்.

**கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1. 25.11.2020 தேதியிட்ட வாதியும் பிரதிவாதியும் ரூ.50,000/- க்கு ஏற்படுத்திக்கொண்ட அண்டிபாண்டு அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 06.11.2023 தேதியிட்ட பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 10.11.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எனது சாட்சியத்தை ஏற்று தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு